018

- DEC 1932

MADRAS

2107

வந்தேமாதரம்,

காந்தி — மந்திரம்

(அல்லது)

மில் தொழிலாளர் சிந்து

இரண்டாம் பாகம்

தமிழ்நாடெங்கும் புகழ்பெற்ற ஸ்ரீமான் திரிசிரபுரம்
...தாம். ம. வடிவேல்ச்சாமி கவிராயரவர்கள் மானவராகிய

மதுரை.

எம். இ. எம். பாஸ்கர தாஸ்,

அவர்களால்

...புகழ்ந்திசைக்கப்பெற்று பதிப்பிக்கபெற்றது.

விலை] ரிஜிஸ்டர் காப்பிரைட் [அணா 1.

உலகப்பிரசித்திபெற்ற புகழோங்கிய

மதுரை வி. கே. அன் சன்ஸ்

அவர்களால் தயாரிக்கபெற்ற

அர்ஜுன
சுகந்தபாக்குத்தூள்

ஆடுதன் மார்க்கு 511 நிர். சோப்பையும்
வி கே. தில்குஷ் தாம்பூலத்தையும்
அர்ஜுன பாக்குத்தூளையும் சதாகாலமும்
உபயோகித்து ஆனந்தமடையுங்கள்.

உ

சிவமயம்.

வந்தேமாதரம்.

OFFICE OF THE REGISTRAR OF
2-DEC 1938
MADRAS

காந்தி — மந்திரம்

(அல்லது)

மில் தொழிலாளர் சிந்து.

இரண்டாம் பாகம்

வெண்பா.

அத்திமுக வித்தகனே ஐங்கரவி நாயகனே
சத்தியுமை யான்ஈன்ற ஷண்முகனே எத்தினமும்
போற்ற வரமளிப்பாய் பொற்பாதத் தூளிதன்னை
எட்டினுற் றெழுத்துக்கிசைந்தே.

1 கோக்கு பறக்குதடி - பாப்பா—(என்ற மெட்டு)

பருந்து பறக்குதடிபாப்பா—வெள்ளை
பாம்பு பதுங்குதடி—பாப்பா

விருந்தருந்தவந்த நல்லபாம்பு—என்ன
விஷயங்கள் செய்புதந்த— நாகப் பாம்பு

விடலாமா பருநதுக்கிடலாமா—நாம்
விரட்டி சாத்மீகத்தாலே—சுடலாமா

அயலூ ரைவிட்டு ஓடிவந்தபாம்பு—என்ன
ஆணவம் செலுத்துதந்த—நாகப் பாம்பு

அஞ்சலாமா அதற்கு அஞ்சலாமா—நாமல்
அடிமைபுகுந்து தினம் கெஞ்சலாமா

ஆட்டுத்தோலுக்கிடங்கேட்டுவந்த பாம்பு—சட்ட
அதிகாரம் செய்புதே மேல் நாட்டுப்—பாம்பு

அதற்கந்தமாமா இந்தியா சொந்தமாமா
அதை அடக்கிக் கையாலெடுத்து ஆட்டலாமா

(கண்ணபிரானேன்ன ஒரு காசியிலவதா (என்ற மெட்டு)

வர்ண பேதமென்று நன்ருய்
வகுத்து விட்டார் சட்டம்—அதினுலே
பெரும் நஸ்ட்ட மென்றழுகுதையோ
குடிகளெல்லாம் யென்னகால கஷ்டம். [வ]

கருப்பு நிறமனிதர்கள்மேல்
விருப்பமே கொள்ளாராம்—பெரும்
நெருப்புப்போல் வருவாராம்— யாதும்
விண்டிடில் பூட்ஸ்காலாலெட்டியே யுதைப்பாராம். [வ]

பொருத்தமில்லா பாஷைதன்னை
விருத்திசெய்யவிட்டோம்—ஔவை
வேத மரந்திட்டோம்—அந்த
புத்தியீனத்தாலல்லவோ யிந்தவிதக் கஷ்ட்டம். [வ]

---

3 கைராட்டின காந்தி கைபானமே (என்ற மெட்டு)

சாத்மீகமே நமது தாய் நாட்டில்
வேண்டுவதோர் பானமே—விவேக [சா]
பூர்த்தியாய்க் கதராடை புனைந்திட நலமே
புண்ணிய மகாத்மா காந்தி—உபதேச [சா]

ராட்டினங்கலமைக்க நாணுநிதியளித்த
ராஜகோபாலாச்சாரி—உபதேச [சா]
வேலைகலற்றபோது விளையாட்டாகவே நூற்க
ஆலைத்தொழிலிதுவே உலகில் (சா)

4 மாதவனே மதனு (என்ற மெட்டு)

கோபமேதையா கூலியாட்கள் மீதையா—பெரு (கோ)
ஆதின இந்தியாவுங்கள்
ஆட்சியோ மெய்யா—அந்த
அம்மை விக்டோரியாயெழுதிய
தெல்லாமே பொய்யா—நீங்கள்
அரிந்ததில்லையா —அதை
அரிந்து சொல்லையா—அடங்கா (கோ)

பாட்டன் பூட்டன் நாற்றின கைராட்டினமூண்டு
எடுத் தாட்டினுலதினிலொரு சூட்சமுமுண்டு
அதை அறியாமல் பண்டு தினம் செய்குரோம்தொண்டு. (கோ)

---

5 ஈனஜென்மம்—[என்ற மெட்டு]

நூற்றி நாற்பத்தி நான்காம் நம்பர் சட்டமே
டோக்குக்கேற்பபட்டதாகுமே இத்திட்டமே (நூ)

சாத்மீகம் கொண்டே சமராடி யாடிட
தேர்ச்சியான சட்டம் ஸ்ரீமானும் விடுத்ததால் [நூ]

ஒற்றுமை நிலமையை சற்று மறியாமல்
துட்டக்குணத்தினுல் கிட்டினதே யந்த [நூ]

அத்திகக்கப்பல் அவனியி லோட்டும்
அருந்தமிழ் எம்மியம். பாஸ்கரனுரையால் [நூ]

6 கூடைமுறம் கட்டுவோம் (என்ற மெட்டு)

உத்தியோகத் தலைவரே சற்றே கேளுங்கள்—நீங்கள்
உதாசினம் பேசுவது சரியல்லங்க
சத்தியநெறி முறையைத் தள்ளிப்போட்டிங்க—ஞானம்
சற்றுமில்லா நூலதின்மேலிச்சைகொண்டிங்க (உ)

கூலியை வாடிபோடியென்பதுங்கள்
வாடிக்கைதானு—நாம்
நீடித்திருப்பதுலகில் நிச்சயந்தானு
நீதமில்லாவார்த்தை நிதையா—ஓசாமிகாள்
நிச்சயமறிந்து கொள்ளையா. (உ)

எலிக்கிமனிய மிச்சமாகிப்போச்சுது—பெரும்
எமப்பூனையிருப்பதரியாதாச்சுது
நரிக்கி நாட்டாண்மைகளுண்டாகிப் போச்சுது—அது
நானுவித சட்டவிட்டம் பேசலாச்சுது—நம்
பெண்டு பிள்ளை கூலிவேலை செய்யப்போகாதா—இதைக்
கண்டரிந்து பேதவார்த்தை தள்ளலாகாதா
எம் இயம் பாஸ்கரன் வாக்கு—ஓசாமி—துரைகளே
யெழிதாய்க் கண்ணாலே நோக்கு [உ]

7 திவ்ய தேரிசனம்—[என்ற மெட்டு]

ஆர், வீயே.

உங்கள் மனமிரங்கிடலாகாதா—எங்கள்

ஆர், வீயே. உங்கள் மனமிரங்கிடலாகாதா

கனலிடும் மெழுகுபோல் உருகினேம் நெஞ்சம்

கருணையிலாததேன வஞ்சம் [உங்கள்]

காலமெலாமுழைத்துரைக்காசுமே யில்லை

கண்ணீர்ததும்பியழுதும்பதிலில்லை

ஏழைகள்மீதுள்ள யிரக்கமே யில்லை

யெங்கள் ஆர் வி துரையாரே [உங்கள்]

திரை கடலுலகெல்லாமிவ்வித பேச்சு

தேசத்தலைவரெல்லா மொற்றுமைக்கலாச்சு

திருவாலவாய் எம் இ எம் பாஸ்க்கரன்பேச்சு

தெரிந்துள மிரங்குவதாமே [உங்கள்

மாயாப்ரபஞ்சத்தில் [என்ற மெட்டு]

ஆலைத் தொழிலாரே அஞ்சாதீர் பஞ்சமில்லை
அரன்செயலால்ஜெயமாகலாம் மாரில்லை [ஆ]

ஆன நாளானது போன நாள் போனது
அவசரம் யாதொன்று மாகாதே நம்புவீர்
அன்பரே யென்பா வுரையறிவீரே
அடுத்துமுயன்றாலும் ஆகுநாளன்றி
ஆகாத நாளெல்லா மாகிடுமோ—இனி
அரன்செயலால்ஜெயமாகலாம் மாரில்லை (ஆ)

ஜெகம்புகழ் ஸ்ரீமான் வரதராஜர் சொன்ன
செய்தி தவராமல் நடந்தமே யானல்
ஜெயம் பெறுவோமே சீக்கிரம் நாமே
செந்தமிழெம்பிய பாஸ்கரர்வாக்கை
சிந்தை தெளிந்தே யகம்தேருவோம்—இனி
அரன் ஜெயலால்ஜெயமாகலாம் மாரில்லை (ஆ)

9 நிக்கா புருஷர்—[யென்ற மெட்டு]

துப்பாக்கி கருமருந்திடும்
தோட்டா வெடிகள் பெரிதல்லங்க (து)

அப்பாடி யிதற்கஞ்சினுல்
நாங்கள் ஆலைத்தொழில்களைப்
பார்ப்பதெப்படிங்க (து)

சிப்பாய் துப்பாக்கி தூக்கி
சீறுரெங்களைச் சுடவே நோக்கி
இப்படிக்கூலிகளைச்செய்ய
அவர்க்கெப்படி மனதே யொப்பின தையய்யோ (து)

தண்ணீரடித்தெங்களைத்
தான்விரட்ட யெண்ணியதை (த)
புண்ணிய கலைக்கட்ருலே
பெரும் பூஷாபலன்களே நாங்களும் பெற்ரேம் (து)

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

காந்தி — மந்திரம்

(அல்லது)

மில்தொழிலாளர் சிந்து.

மூன்றும் பாகம்

கூடியசீக்கிரம் வெளிவருகிறது.

Sangeetha Sandamarutha

Mr. P M. MANIVEL (Age 21)

RAJA PART

Apply to the Following Address those who are willng to Act in the Talkies,

MARRIAPPA SAMI, Avl.,
New Kosavarpalayam, MADURA

ஸிடி பிரஸ், மதுரை:—38. 1000